செ.வெ.எண்:11 நாள்:05.12.2018

கரூர் மாவட்டம்

**2018-19ம் ஆண்டில் 68,239 விவசாயிகளின் நிலத்தில் மண் வள பரிசோதனை செய்யப்பட்டு அதன் விவரங்கள் அடங்கிய மண்வளஅட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கரூர் மாவட்டம், குளித்தலையில் உலக மண் வள தினத்தை முன்னிட்டு விவசாயிகளுக்காக அமைக்கப்பட்ட கண்காட்சியை பார்வையிட்டு அது தொடர்பான கருத்தரங்கத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.12.2018) கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மண் வள அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மனிதனுக்கு உடல்பரிசோதனை எவ்வளவு முக்கியமோ, அதே போல நல்ல பயிர்களை விளைவிக்க நிலத்தின் மண் பரிசோதனை மிகவும் முக்கியமானதாகும். விவசாயிகள் அனைவரும் தங்கள் விளைநிலத்தின் மண்ணின் தன்மையை தெரிந்து கொண்டு அதற்கேற்றாற்போல் சாகுபடி மேற்கொண்டால் நல்ல விளைச்சலை பெற முடியும். வேளாண் துறையின் சார்பாக விவசாயிகளின் விளைநிலத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண் வளம் குறித்த தகவல்கள் அடங்கிய அட்டைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் மண் மாதிரிகள் வலைச்சட்ட முறையில் (Grid Sampling) மானாவாரி நிலங்களில் 10 ஹக்டருக்கு ஒரு மண் மாதிரியும் நன்செய் நிலங்களில் 2.5 ஹக்டருக்கு ஒரு மண் மாதிரியும் ஆய்வுக்காக சேகரிக்கப்படும். மண் மாதிரி சேகரிக்கப்பட்ட இடத்தின் அட்ச தீர்க்க ரேகை சேரிக்கப்பட்டு குறிப்பிட்ட வலைச்சட்டத்திற்குள் அனைத்து விவசாயிகளுக்கும் மண் மாதிரி முடிவறிக்கை வழங்கப்பட்டு வருகிறது.

கரூர் மாவட்டத்தில் 8 வட்டாரங்களிலிருந்தும் 203 வருவாய் கிராமங்களில் 2015-16 மற்றும் 2016-17 வருடங்களில் ஒரு சுழற்சியில் 1,46,051 வவிசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது சுழற்சியில் 2017-18 ஆண்டில் 77,812 மண்வள அட்டைகள் வவிசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2018-19 ம் ஆண்டில் 10,363 மண் மாதிரிகள் சேகரிக்கட்டு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது வரை 7,817 மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மண்வள அட்டைகள் பிப்ரவரி 2019க்குள் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்வள அட்டையிலுள்ளபடி விவசாயம் செய்தால் அதே இடம், அதே உழைப்பு மற்றும் அதே நேரத்தில் அதிக மகசூலை பெற முடியும். மேலும், விவசாயிகளின் நிலத்தில் வழக்கமாக செய்துவரும் பயிர்களைக் காட்டிலும் வேறு என்னென்ன பயிர்கள் சாகுபடி செய்தால் நன்றாக வரும், அதிக மகசூல் கிடைக்கும் என்பது குறித்த தகவல்களையும் மண்வள அட்டையில் குறித்துக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், சிறிய அளவிலான தொகையை பயிர் காப்பீட்டுக்காக செலுத்தி இயற்கை பேரிடர், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மூலம் பெரிய இழப்பீடுகளை தவிர்க்கலாம். நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 20% தண்ணீரை மட்டுமே பயன்படுத்தி அதிக அளவில் மகசூல் பெற முடியும் என்பதை அனுபவ அறிவுப்படியும், அறிவியல் அறிவுப்படியும் விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும். அரசு வழங்கும் சலுகைகள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தி குறைந்த நீரில், குறைந்த உழைப்பில், அதிக அளவில் மகசூலை பெற முடியும்.

இவ்வாறு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண் இணை இயக்குநர் திருமதி ஜெயந்தி, குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் திரு. லியாகத், வேளாண் உதவி இயக்குநர் திரு.வெ.பாண்டி, வேளாண்மை அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி முனைவர் ஜெ.திரவியம், தேசிய வாழை ஆராய்ச்சி மைய விஞ்ஞானி திரு.ஜெயபாஸ்கர், துணை இயக்குநர் திரு.கந்தசாமி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி கலா மற்றும் முன்னோடி விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்புஅலுவலகம், கரூர்.**